




# மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) நாமக்கல் மாவட்டம்

## திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம்

## வரகூராம்பட்டி ஊராட்சி

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், வரகூராம்பட்டி கிராமம், ச.எண் : 103/1C3 - ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.

அளவு : 1:400 (அ) 1" = 33'0"
கோப்பு எண் : ZIRKL5MW/20857/2024 - நாமா

N

**குறிப்பு:**

1. மனைப்பிரிவின் மொத்தப் பரப்பு : 2.38 ஏக்கர் (அ) 9644.00 சதுர மீட்டர்
2. மனைப்பிரிவின் எல்லை ..........
3. உத்தேச மனைப்பிரிவு சாலை ..........
4. நிலையிலுள்ள சாலை ..........
5. கோரிய மனைகள் : 28
6. ஒதுக்கிய மனைகள் : 28
7. உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை :

(a) உத்தேச சாலைகள் (ம) மூலை முடக்குகளின் பரப்பளவு = 3001.68 ச.மீ

(b) ஒதுக்கப்படவேண்டிய 10% பூங்காவிற்கான பரப்பளவு = (மனைப்பிரிவின் மொத்தபரப்பு – சாலைகளின் மொத்தப்பரப்பு) x (10/100)
= (9644.00 – 3001.68) x (10/100)
= 665.00 ச.மீ

அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கள் துறை நாள் 04.02.2019 –ன் படி 10% OSR ஈடான அரசு வழிகாட்டி மதிப்பீட்டு தொகையினை மனுதாரரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

பொது ஒதுக்கீடுகள் :

(உத்தேச சாலை பரப்பளவு நீங்கலாக மீதமுள்ள பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது)

8. பொது உபயோகம் (TNCDBR, 47(8)) –ன் படி தானமாக ஒப்படைக்கப்பட்ட 1% ஒதுக்கீடு:

1. உள்ளாட்சிக்கான பொது ஒதுக்கீட்டின் பரப்பளவு = 34.00 ச.மீ (0.51%) ..........
2. TANGEDCO– க்கான ஒதுக்கீட்டின் பரப்பளவு = 34.00 ச.மீ (0.51%) ..........

*மூலை முடக்கு : 12மீ அகல சாலை வரை **1.50mX1.50m***

**நிபந்தனைகள் :**

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் , எந்தத துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவருக்கு அனுப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.
2. அரசாணை எண் 71-ன் ஊரக வளர்ச்சி துறை நாள்: 16-06-2003 -ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழு திருப்தியில் உள்ளது எனச் சான்றளித்துள்ளதன் பேரில் இம்மனைப்-பிரிவிற்கு தொழில் நுட்ப ஒப்புதல வழங்கபட்டுள்ளது.
3. அரசாணை எண் 18-ன் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கள் துறை நாள் 04-02-2019 -ன் படி அரசு வழிகாட்டு மதிப்பீன்படி தொகை செலுத்தப்பட வேண்டும்.
4. அரசாணை எண் 181-ன் வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 09-12-2020 -ன் படி உள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கபட்ட சான்றுகள் மற்றும் பரீசிலனைக்குச் சமர்பிக்கபட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்குத் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கய-தில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கபட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு ஆணையர், அவர்களால் இரத்து செய்யபடும்.
6. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கபட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கபட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத் துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்-பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை தொழில் நுட்ப அனுமதி /திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் கிரயப்பத்திரம், குத்தகைபத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகாரபத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபாக்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும்எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும் இன்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' X 4' அளவிலான தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கபட வேண்டும்.
9. நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருப்பின் இத்துறையின் மனைப்பிரிவி அனுமதி செல்லதக்கது அல்ல.
10. உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீர்நிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டங்கள் கட்டப்பட வேண்டும்.
11. உத்தேச மனைப்பிரிவின் ஊடே HT LINE, LT LINE மற்றும் TELEPHONE LINE செல்லுமாயின் அதனை சாலையின் போக்கிற்கேற்ப மாற்றியமைக்கபட வேண்டும்.
12. உத்தேச மனைப்பிரிவின் இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.
13. உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

APPROVAL NO: SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO:62/2024

E.Sign__________

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்.

தே.புவனேஸ்வரி,
அளவர் / உதவி வரைவாளர்

ச.சுரேந்திரன்,
வரைவாளர் நிலை - III

பொ.யமுனாதேவி,
மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை - II

Signature Not Verified